



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு சங்கராச்சார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை



ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் ஒவ்வொருவரும் கடவுள் மீது உறுதியான பக்தி கொண்டிருக்க வேண்டும், பெருமை மற்றும் தேவையற்ற ஆசைகளை விட்டுவிட வேண்டும், இரக்க மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். ஒருவர் இந்த போதனைகளை தானே கடைப்பிடிக்காத போது அதை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. துரதிர்ஷ்டவசமாக, **“स्वयं नष्टः, परान् नाशयति” “ஸ்வயம்’ நஷ்ட:, பரான் நாஶயதி”** (தனக்குத்தானே அழிவை ஏற்படுத்திக் கொண்டு, பின்னர் மற்றவர்களுக்கு அழிவைக் கொண்டு வருபவர்) என்ற பழமொழிக்கு உதாரணங்களாக இன்றைய நாட்களில் பல உள்ளன என்று ஜகத்குரு சுட்டிக்காட்டினார். அதற்கு பதிலாக, **“स्वयं तीर्णः परांस्तारयति” “ஸ்வயம்’ தீர்ண: பராம்’ஸ்தாரயதி”** (சம்சாரக் கடலைக் கடந்து வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றியவர்) என்ற பழமொழிக்கு உதாரணமாக இருக்க பாடுபட வேண்டும் என்று ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யர் கூறினார்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரின் அவதாரம் தனித்துவமானது, ஏனெனில் அவரது முயற்சிகள் தீமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக மக்களின் மனதை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. யாத்திரையை மேற்கொண்டு தர்மத்தின் கொள்கைகளைப் போதிப்பதன் மூலம், குருவின் நிலையில் இருப்பவருக்கு சாஸ்திரங்களில் வகுக்கப்பட்ட இலட்சியத்தைப் பின்பற்றுவதாக ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர் தனது வாழ்க்கையை வந்து காட்டினார்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸந்தேகம் தெளிதல்

**(பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓம்காரானந்தர்)**



**கேள்வி : 1) நாம் நமது கண்களைத் தானம் செய்யலாமா? 2) தானம் செய்வது நல்லதா அல்லது கெடுதலா? 3) தானம் செய்வதால் கண்கள் சென்று அடையும் நபரின் தலைவிதியை நாம் மாற்றி விட்டது போல் ஆகாதா? அந்த நபர் இன்னொரு பிறவியெடுத்து அதே மாதிரி துன்பம் அநுபவிக்க நேருமா?**

**ஸ்வாமிஜீ :** 1) தாராளமாகத் தானம் செய்யலாம், புண்யம் தரும். 2) தைத்திரீய உபநிஷத்தின் கடைசிப் பகுதியில் பெரியோர்களால் செய்யப்படவேண்டிய தர்ம நிர்ணயம் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் கண்தானம் செய்வது இக்காலத்தில் மிகப்பெரிய புண்யமாகும். 3) இவ்வாறு ஸாஸ்த்ரத்திற்குப் பொருந்தாத சிந்தனைகளை அகற்றுங்கள். இறைவன் நமக்கு நல்லதொரு தானம் செய்யும் வாய்ப்பை வழங்கியுள்ளாரென்று மனமுவந்து வழங்குங்கள். அவ்வாறு விரும்புகின்றவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் சிறந்த கண்ணொளியை இறைவன் வழங்குவார்.

**கேள்வி :** இக்காலத்தில் தாய் தந்தையரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏன் குறைந்துவிட்டது? இதை எப்படித் திருத்தலாம்?

**ஸ்வாமிஜீ :** நாம் வளர்த்தவிதம் அப்படி இருக்கக்கூடும். அதன் பயனை அநுபவிக்கிறோம். பொருளின் மீது மோஹம் நிறைந்துள்ள இக்காலத்தில் நற்பண்புகள் குறைவாகத்தான் இருக்கும். திருத்துவது நமது பணியன்று நம்மால் இயலவும் இயலாது. அவர்களுக்கு நற்பண்புகள் வளரவேண்டுமென்று இறைவனிடம் ப்ரார்த்திப்பது ஒன்றுமட்டுமே நம்மால் இயலும்.

(தொடரும்) நன்றி : வேதநெறி, வெப்: https://www.vedaneri.org/

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள்.

15. ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்காத புஷ்பத்தை தரிக்கலாகாது. மயிருக்கு வெளியில் தெரியும்படி புஷ்பம் அணியக்கூடாது. தலைவாரி (பின்னதவர்) மயிருடன் புஷ்பமாலையை சேர்த்துக் கட்டிக்கொண்டால் வாஸனை சிறிது கூட வெளியில் போகாது. மணமில்லாத காகிதப்பூ, டிஸம்பர் புஷ்பங்களை ஸ்திரீகள் தரிக்கக் கூடாது. பழய புஷ்பங்களைக்கூட காலால் மிதிக்கக் கூடாது.

16. ஒற்றைமாட்டு வண்டியில் ஏறக்கூடாது. தீர்த்த யாத்திரை, க்ஷேத்திர யாத்திரை போகும்போது ஒற்றை மாட்டு வண்டியில் போனால் ஏற்கனவே செய்த புண்ணியத்தையும் அது போக்கிவிடும். ஒற்றைக்காளை சிவனது வாஹனம். வ்ருஷபமாக ரூபமெடுத்து தர்மதேவதை சிவனைச் சுமக்கின்றது. நாம் ஒற்றைக் காளை மீது ஏறினாலும் அல்லது ஒற்றைமாட்டு வண்டியில் ஏறினாலும் தர்மத்தின் மீது ஏறுவதாகும். சிவ வாஹனத்தில் ஏறி, சிவாபசாரம் செய்ததுமாகும்.

17. நமது ஊர் அல்லது வீட்டிற்குப் பின்புறம் வழியாகப் போகக்கூடாது. வாசற்படி வழியாகவே செல்ல வேண்டும். தக்ஷனது யாகசாலைக்குத் தாக்ஷாயணீ தேவி பின்புறமாகவே சென்று, யாகத்தையும் அழித்துத் தன் உடலையும் விட்டு, மற்றோர் அப்படிப் போகக் கூடாதெனக் காண்பித்தாள்.

18. ராத்திரி காலத்தில் மரத்தின் நிழலில் எவரும் தங்கக்கூடாது. கர்பிணிகள் தங்கினால் உடனே கர்பத்திற்குத் துன்பமுண்டாகும். இரவு வேளையில் பக்ஷிகள் மரத்தின் மீது வந்து தங்கும். மரத்தின் கீழ் உள்ளவர் மீது எச்சமிடும். மரத்தில் பேய் பிசாசுகள் அண்டவரும். அவைகளால் நமக்குத் தீங்கு உண்டாகும். மரங்கள் இரவில் கரிமல வாயுவை வெளியாக்குவதால், அதன் அடியில் வசிப்பவருக்கு நோய் உண்டாகும், நோயே பேய் எனப்படும். கலியில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் நோயெல்லாம் பேயாகும் என புராணம் கூறுகிறது.

19. சூதாடலாகாது. காசுவைத்து சீட்டாட்டம் ஆடுவதும் சூதாடுவதாகும். ஸகல தர்மங்களையும் தெரிந்து அனுஷ்டித்து வந்த தர்மராஜனே "க்ஷத்ரியனை சண்டைக்கும் சூதாடவும் அழைத்தால் வரமாட்டேன் எனதிரும்பக் கூடாது" என்ற சாஸ்திரத்தைத் தழுவி, சூதாடி, பட்ட கஷ்டத்தைப் பாரதம் கூறுகிறது. பொய், பேராசை, த்ரோஹம், முதலிய பல பாபம் தோன்றுவதால் அது மஹா பாபமானது. அரசாங்க சிக்ஷை கிடைப்பதும் ப்ரத்யக்ஷம்.

(தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## சாஸ்திரம் அறிவோம்


**(ப்ரஹ்மஸ்ரீ சாம வேத நித்ய அக்னிஹோத்ரி நங்கநல்லூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸௌத்ரிகள்)**

**கேள்வி :** இன்றைய சூழ்நிலையில் அப்பாட்மெண்டில் வசிக்கிறோம். காலை வாசலில் கோலம் போடுவதில்லை பலரும். இது சரியா ? அப்படியே ஸ்டிக்கர் கோலங்களும், பெயிண்டு கோலமும் பொடுகிறார்களே இது ஏற்க கூடியதா ?

**பதில் :** எந்த சூழ்நிலையிலும் நாம் வசித்தாலும், வீட்டு வாசலில் காலையில் கோலம் கட்டாயம் போட வேண்டும். பச்சரிசியை நன்றாக திரித்து, இழை கோலம் போடுவது அவசியம். இந்த அரிசிமா கோலமே வீட்டுக்கு மங்கலத்தையும், க்ஷேமத்தையும் தரும். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் இந்த கோலத்தை கற்றுக் கொண்டு போடுதல் அவசியம். இதுவே தொன்று தொட்டு பின்பற்றப்படும் வழக்கம். சிறிய படியாக இருந்தாலும் சிறிய கோலம் போட வேண்டும். போடாமல் மட்டும் இருக்கவே கூடாது. பெயிண்டு மற்றும் ஸ்டிக்கர் கோலங்களை தவிர்க்க வேண்டும்.

**கேள்வி :** நாம் காலையில் பூஜை அறையில் ஏற்றிய விளக்குகளை (ஒன்றுக்கு மேல் ஏற்றி வைக்கிறோம்) எப்பொழுது மலையேற்ற வேண்டும்? ஒன்றை மட்டும் இரவு நேரத்தில் மலையெற்றலாமா ?


**பதில் :** காலை எழுந்தவுடன் காலை கடன்களை எல்லாம் முடித்து விட்டு, கை கால்களை நன்றாக சுத்தம் செய்து விட்டு வாசல் கதவை திறந்து விட்டு விளக்கு ஏற்றவேண்டும். ஒரே விளக்கில் இரண்டு முகங்களாக பல வீடுகளில் ஏற்றுவதும் வழக்கம். கிழக்கு முகமாகவு ஒன்றும், வடக்கு முகமாக மற்றோன்றும் இருக்க வேண்டும். காலையில் விளக்கு ஏற்றிய பின் மதியம் மலையேற்றி விடலாம். பின் மீண்டும் மாலை வேளையில் விளக்கு ஏற்ற வேண்டும். நாம் பூஜை செய்யும் வேளையில் அவசியம் விளக்கு ஏற்றி இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கும் ஏற்றலாம். அதிலும் குற்றமில்லை. ஆனால் காலையும் மாலையும் கட்டாயம் நாம் விளக்கு ஏற்ற வேண்டும். அதே நேரத்தில் எக்காரணத்தைக் கொண்டும் இரவு வேளையில் விடிய விடிய விளக்கு எரிய கூடாது. இரவு பூஜை முடிந்த பின் விளக்கை மலையேற்றி விடவேண்டும் (குளிர விட வேண்டும் அல்லது சமாதானம் செய்து விடவேண்டும்). அதே போல் வாசலிலும் விளக்கு வைப்பது என்பது ஸம்ப்ரதாயத்தில் உண்டு. (ஒரு விளக்காவது விளக்கு மாடத்தில் வைக்க வேண்டும் .தனி வீடாக இருந்தால். அப்பாட்மென்ட்டாக இருந்தால் வாசலின் வைக்கவேண்டும்) (தொடரும்..)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## தர்ம சாஸ்திரம்

**(ப்ரஹ்மஶ்ரீ ராமேஸ்வர அவதானிகளின் ப்ரசிஷ்யர் ப்ரஹ்மஶ்ரீ ராஜீவாக்ஷ கனபாடிகள்)**

**தர்ம சாஸ்திர விதிமுறைகளை யார் யார் கடைபிடிக்க வேண்டும்?**


தர்மசாஸ்த்ர விதிமுறைகள் மனிதர்களாக பிறந்த அனைவராலும் கடைபிடிக்க வேண்டும். அந்த விதிமுறைகள் எல்லோருக்கும் சரி சமமில்லை. சிறுவர்களுக்கு ஒரு தர்மம், வயோதிகர்களுக்கு ஒரு தர்மம், ஸ்திரீகளுக்கு ஒரு தர்மம், கர்ப்பிணி ஸ்திரீகளுக்கு ஒரு தர்மம், வியாதி உடையவர்களுக்கு ஒரு தர்மம், பொதுவான தர்மம், வர்ண தர்மங்கள், ஆசிரம தர்மங்கள்-(பிரம்மசர்யாசிரம தர்மம், கிரஹஸ்தாசிரம தர்மம், வானப்பிரஸ்தாசிரம தர்மம், சன்னியா ஸாசிரம தர்மம்) என்று தர்மங்கள் அவரவர் நிலைக்கு தகுந்தாற்போல் மாறுகின்றன.

**1) சிறுவர்கள் தர்மம்**


பிறந்ததிலிருந்து ஐந்து வயது வரை உள்ள சிறுவர்களுக்கான தர்மங்கள் .

**कामचारः कामवादः कामभक्षः காமசார: காமவாத$^{3}$: காமப$^{4}$க்ஷ:** என்பது விதி. இதன் பொருள் இஷ்டப்படி இருப்பதும், இஷ்டப்படி பேசுவதும், இஷ்டப்படி உண்ணுவதும் அவர்களின் தர்மம். பெரியவர்களை போன்று இந்த சமயத்தில் இதை செய்ய வேண்டும் என்ற நியமமும், உண்மை பொய் என்று அறியாத பருவத்தில் இருப்பதால் பொய் சொல்லும் தோஷமும், இந்த சமயத்தில் இதைதான் உண்ண வேண்டும் என்ற நியமமும் சிறுவர்களுக்கு கிடையாது.ஆகவே மற்றவர்கள் தர்மங்களை காற்றிலும் சிறுவர்களின் தர்மம் வேறுபடுகிறது. இந்த சிறுவர்களின் தர்மத்தை மற்றவர்கள் பின்பற்றக் கூடாது என்பது தர்ம சாஸ்திரம்.

(தொடரும்...)







## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## குறியும் நெறியும்

(ஸ்வாமீ பூர்ணானந்தர்)

**உண்மையான பயணம்**

எனவே ஒருமனிதனின் முதல் குறி லக்ஷ்யம் இலக்கு "தான் யார்?" என்பதை அறிந்து கொள்வதே. "நான் யார் என்று எனக்குத் தெரியாதா என்ன?" என நீங்கள் கேட்கலாம்.

தெரியாது என்பதே உண்மை. 'என்னுடைய' என்பது ஒருபொழுதும் நானாக முடியாது. உதாரணமாக என்னுடைய புத்தகம், என்னுடைய வீடு, என்னுடைய ஸஹோதரன் என்னுடையது என்பது எனக்கு வேறானது; அது எப்பொழுதும் 'நானாக முடியாது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. ஆனால் இந்த உடலை சிலசமயம் 'நான்' என்கிறோம். (நான் படித்தவன்.) வேறுசில சமயத்திலோ 'என்னுடையது' என்கிறோம். (என் உடம்பு சரியில்லை.) இவ்வாறே மனத்தையும் அறிவையும் ஒருபொழுது 'நான்' எனவும், வேறொரு பொழுது 'எனது' எனவும் கூறுகிறோம்.

இப்பொழுது யோசியுங்கள்: இந்த உடல் 'நானா!' 'என்னுடையதா?' மனமும் புத்தியும் அவ்வாறே. உண்மையில் 'நான்' இந்த உடலா? மனமா? அறிவா? அல்லது இவைகளின் கலவையா? அல்லது இவைகளுக்கு வேறானவனா? யோசியுங்கள்.

எனவே, எது உண்மையான நான்? என்னுடைய தன்மை என்ன? இந்த உலகுக்கும் எனக்கும் தொடர்பு என்ன? இங்கு நான் செய்ய வேண்டியது என்ன? என்பதே ஒவ்வொரு மனிதனும் முதலில் தெரிந்து கொள்ளவேண்டியது.

என்னுடையது என்பது என்னுடையதுதான். அது எப்பொழுதும் நான் ஆகாது. ஆனால் இந்த உடலைப் பொறுத்தவரை நமக்குக் குழப்பம் இருக்கிறது. உடலை (மனம், அறிவையும்) ஒரு பொழுது என்னுடையது எனவும், ஒருபொழுது நான் எனவும் கூறுகிறோம். இதில் எது உண்மை? இந்தக் குழப்பம் தீர இன்னொரு விதியைப் பார்ப்போம்.

(தொடரும்)
நன்றி : வேதநெறி வெப்: https://www.vedaneri.org/

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# வேத மந்திரங்களின் சிறப்புகள்



### க்ருஷ்ண யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை (காண்டம் 1)
### (1.1.3 அனுவாகம் 3) (9 யஜுஸ்; 1 ரிக்) (சந்தம்: 8, காயத்ரி)

4 - 10 ஆனந்தத்தின் துளியும் (ஸ்தோகா) , ஆனந்த வெள்ளமும் அக்னிக்கும் (ஸ்வாஹா – முழுமனதுடன் எந்தவிதக் குறையும், தடையும் இன்றி அர்ப்பணித்தல்) வீரியம் உள்ள வானுலகுக்கும் பூவுலகுக்கும் அர்ப்பணிக்கப்பட்டது. அவளே ப்ரபஞ்சத்தின் ஜீவன். அவளே எல்லாமானவள். (எல்லாவற்றையும் சூழ்ந்து கொள்ளுபவள்) ப்ரபஞ்சத்தின் உழைப்பாளியும் படைப்பாளியும் அவளே. நீ ஸத்யத்துடன் இணைக்கப்படுவாயாக. மிகவும் இனிப்பான அலைகளாக விளங்கும் நீ, ஆன்ம ஞானப் பொக்கிஷத்தை அடைவிக்கும் நீ - ஆனந்தத்துளி. உன்னைத் தாங்கும் - உனக்கு ஆதாரமான இந்திரனின் பொருட்டு, உன்னை ஸோமனுடன் (ஸோமன் என்றால் மகிழ்வு) இணைக்கிறேன். விஷ்ணுவே (விஷ்ணுவே யக்ஞம் அல்லது யக்ஞமே விஷ்ணு.)! எங்கள் நிவேதனத்தை பாதுகாப்பாயாக. (யக்ஞத்திடம் செய்யப்படும் பிரார்த்தனை, காப்பாற்ற வேண்டுதலுடன் நிறைவடைகிறது.)

### (1.1.4 அனுவாகம் 4) (19 யஜுஸ்)

1 - 6 இந்த யக்ஞ கர்மாவிற்கு உங்கள் இருவரையும் (அக்னியும், ஸோமனும்) அழைக்கிறேன். தேவ காரியத்தைச் செய்வதற்கு நான் பலமுள்ளவனாக ஆவேனாக. நீங்கள் எல்லாவற்றையும் சூழும் விஷ்ணுவாக ஆகுக. அரக்கர்களும் தீயசக்திகளும் தங்களால் எரிக்கப்பட்டனர். நீ(அக்னி)யே நுகத்தடியாகிறாய். எங்களுக்குத் தீங்கிழைப்பவனை நீ பங்கப்படுத்து. நாங்கள் எவருக்குத் தீங்கு செய்ய விரும்பினோமோ அவர்களை ஏற்கனவே சேதப்படுத்தி விட்டாய். (தீய சக்திகளை விரட்டுவதற்காகத் தூபம் காட்டும்பொழுது இந்தப் பிரார்த்தனை தற்காலமும் தினம் சொல்லப்படுகிறது.)

தேவர்களில் நீயே மிகவும் புனிதமானவன்; நிறைவானவன்; அனுகூலமானவன், ஆஹுதிகளை எடுத்துச் செல்லும் சிறந்த வாகனமும் ஆனவன். மற்ற தேவர்களை அழைப்பதில் சிறந்தவன். ஆஹுதி செய்வதை வாங்கி ஏற்றுக் கொள்வதில் சிறிதும் பிறழாதவன். உறுதியானவன் ஆக இரு. தடுமாறாதே. (தொடரும்….)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## சில உபநிஷத்துக்களின் சாரம்

### || ப்ரஹ்மோபநிஷத் ||

17. எல்லா உயிரினங்களின் அந்தராத்மாவாகவும் வசிக்கும் ஒருவரே, உயர்ந்த கட்டுப்பாட்டாளர், சாராம்சத்தில் ஒருவராக இருந்தாலும், பலவாகத் தோன்றுகிறார். அவரைத் தங்கள் சொந்த ஆன்மாவுக்குள் வசிப்பதாக உணரும் ஞானிகள் - அவர்களுக்கு மட்டுமே நித்திய பேரின்பம் உண்டு, மற்றவர்களுக்கு அல்ல.

18. ஆத்மாவைக் கீழ் அரணியாகவும், ப்ரணவம் எனும் ஓங்காரத்தை மேல் அரணியாகவும் செய்து கொண்டு தியானமாகிற கடைதலை அப்பியாசம் செய்து மறைந்திருந்த அக்னியை வெளிக் காண்பதுபோல் பரமாத்மாவை நாம் காணவேண்டும்.


19. ஸத்தியத்தாலும் தவத்தாலும் எவன் தொடர்ந்து பார்க்கிறானோ அவனுடைய உள்ளத்தில் எள்ளில் மறைந்திருந்த எண்ணெய் போலவும், தயிரில் இருந்த வெண்ணெய் போலவும், ஆற்றில் இருந்த நீர்போலவும், அரணிக்கட்டைகளிலிருந்த நெருப்புப் போலவும் ஆத்மா வெளித்தோன்றுகிறது.

20. சிலந்திப்பூச்சி எவ்வாறு நூலை உண்டாக்கி மீண்டும் தனக்குள்ளே இழுத்துக் கொள்ளுகிறதோ அவ்வாறே ஜீவன் விழிப்பிலும் உறக்கத்திலும் (வெளிஉலகிற்கு) வருகிறான், மறுபடி திரும்பி (உள்ளே) போகிறான்.


21. (ஜீவன்) ஜாக்ரத்தில் கண்ணில் இருப்பதாகவும், ஸ்வப்னத்தில் கழுத்தில் உறைவதாகவும், ஸுஷுப்தியில் இருதயத்தில் உள்ளதாகவும் துரீயத்தில் தலை உச்சியில் நிலைபெற்றதாகவும் அறியவேண்டும்.

22. எந்த நிலையை (எட்டிப்பிடிக்க முடியாமல்) மனதுடன் கூட வாக்கும் திரும்பி விடுகிறதோ அதுதான் ஜீவனுடைய (பரிபூர்ண) ஆனந்தநிலை . அதை உணர்ந்து புத்திமான் முக்தனாகிறான்.

23. பாலில் வெண்ணெய்போல் எங்கும் வியாபித்திருக்கும் ஆத்மாவை ஞானத்தாலும் தவத்தின் மூலமாகவும் (அறிய வேண்டும்). அதுதான் பிரம்மோப நிஷத்தால் அடையவேண்டிய பதவி. அதுதான் பிரம் மோபநிஷத்தால் அடையவேண்டிய பதம் எனப்பூர்த்தி. (தொடரும்....)



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wIaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UII

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |